முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S. No. 623/2020

தேதி : 11–12–2023

(வா.சா.1) – நாகாத்தாள்.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் கூடுதலாக குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

கூடுதல் குறுக்கு விசாரணை :

2 ம் பிரதிவாதி பங்காரு என்ற சண்முகம் என்பவரை யாரென்று எனக்கு தெரியாது. 2 ம் பிரதிவாதிக்கு உரிமைப்பட்ட கிரைய ஆவணத்தில் கண்ட பிளாட் எண். 58 மற்றும் 59 என்றால் எனக்கு தெரியாது. ஆனால் எங்கள் சொத்து வேறு, ஆனால் 2 ம் பிரதிவாதியின் சொத்து வேறு ஆகும். எங்கள் சொத்தும், 2 ம் பிரதிவாதியின் சொத்தும் வேறு வேறாகும். வழக்கு சொத்து எனக்கும், என் முன் பாத்தியஸ்தர்களுக்கும் உரிமைப்பட்டது என்று பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண். 58/2006 வழக்கு தாக்கல் செய்து 22.08.2016 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கின் மீது மேல்நடவடிக்கை எடுக்கவில்லை. 4 ம் பிரதிவாதி 15.02.2020 ம் தேதியில் ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன்மீது நான் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் தெரியாது. இந்த வழக்கை தாக்கல் செய்ய எனக்கு உரிமையில்லை என்றும், எனவே வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2023.12.13 10:49:34 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.